## தமிழ்ப் பெண்களின் தந்தையாகத் திகழும் முதல்வர் தளபதிக்குத் தகுதியான எதிரிகளே இல்லை!

# எதிர்க்கட்சியில் இருக்க வேண்டியவர் தமிழ்நாட்டின் ஆளுநராக இருக்கிறார்!

## தென்காசி – சுரண்டையில் கனிமொழி கருணாநிதி எம்.பி. பேச்சு!

தென்காசி, பிப் .1 –

**தமிழ்ப் பெண்களின் சகோதரராக, தந்தையாகத் திகழும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்குத் தகுதியான எதிரிகளே இல்லை என்றும், எதிர்க்கட்சியில் இருக்க வேண்டிய ஆர்.என்.ரவி தமிழ்நாட்டில் ஆளுநராக இருக்கிறார். அப்படிப்பட்டவரை வைத்துக் கொண்டு ஆட்சி நடத்த வேண்டிய சூலலில் இருக்கிறோம் என்றும் துணை பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் தென்காசி மாவட்டம், சுரண்டையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றும் போது குறிப்பிட்டார்.**

தென்காசி தெற்கு மாவட்டம், சுரண்டையில் தென்காசி தெற்கு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நடைபெற்ற திராவிட மாடல் ஆட்சியின் சாதனை விளக்க பொதுக்கூட்டத்தில் திமுக துணைப் பொதுச் செயலாளரும், திமுக நாடாளுமன்றக் குழு தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றி, விவசாயிகளுக்கு விவசாய பொருட்கள், மகளிருக்கு வீட்டு உபயோக பொருட்கள் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

அப்போது அவர் ஆற்றிய உரை வருமாறு:

“திராவிட மாடல் என்ற வார்த்தையை கேட்டாலே சிலரை கலங்க வைக்கும் அளவுக்கு மாறி இருக்கிறது. ஏனென்றால் நமக்கு எதிராக இருக்கக்கூடிய பகைவர்கள் திராவிடம் என்பதை உடைக்க வேண்டும் என்று நினைக்கக் கூடியவர்கள்.

**திராவிட மாடலுக்கும் அவர்கள் மாடலுக்கும் உள்ள வித்தியாசம்!**

திராவிடம் என்பது திராவிட மாடல் ஆட்சி என்பது எல்லோருக்குமான ஆட்சியாக இருக்க வேண்டும். நம்முடைய முதலமைச்சர் அண்ணன் தளபதி பேசும்போது திராவிட மாடல் ஆட்சி என்பது எல்லோருக்குமான ஆட்சி என தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்.

ஆனால் இந்த திராவிட மாடல் ஆட்சியை எதிர்க்க வேண்டும் என்று நினைக்கக் கூடியவர்கள், யாருக்கும் எதுவும் கிடைக்கக் கூடாது… தனக்கு வேண்டியவர்களுக்கு மட்டும் எல்லாம் கிடைக்க வேண்டும், அதாவது காலம் காலமாக கல்வி பொருளாதாரத்தில் யார் உயர்ந்திருந்தார்களோ?நூறு வருஷத்துக்கு முன்பு யார் பதவியில் இருந்தார்களோ? அவர்களுக்கு மட்டுமே அந்த வாய்ப்புகள் கிடைக்க வேண்டும் என்று நினைப்பவர்கள்.

மறுபடியும் இந்த தமிழ்நாடு 300 வருடத்திற்கு முன்பு 200 வருடத்திற்கு முன்பு எந்த ஒரு நிலையிலே இருந்ததோ அதே இடத்துக்கு கொண்டு போய் நம்மை மறுபடியும் நிறுத்தி விட வேண்டும் என்று நினைக்கக் கூடியவர்கள்.

நாம் எல்லோருக்கும் எல்லாம் என்று நினைக்கிறோம். ஆனால் அவர்கள் யாருக்கும் கிடையாது நாங்கள் மட்டும் வைத்துக் கொள்வோம் என்கிறார்கள். இதுதான் திராவிட மாடலுக்கும் அவர்களுடைய மாடலுக்கும் இருக்கக்கூடிய வித்தியாசம்.

நமக்குத் தெரியும், சிறிய சிறிய தொழில் நிறுவனங்கள் எல்லாம் ஒழித்துக் கட்டிவிட்டு இரண்டு பேர் மட்டுமே தொழில்துறையில் இயங்க வேண்டும் என்று நினைக்கக் கூடியது தான் ஒன்றிய அரசு. அந்த இரண்டு பேர் யார் என்று உங்களுக்கே தெரியும். அந்த இருவரை தவிர வேறு யாருக்கும் வாய்ப்புகள் இருக்கக் கூடாது.

அதேபோல யாரெல்லாம் இந்த சமூகத்தில் பிறப்பால் தங்களை உயர்ந்தவர்கள் என்று நினைத்துக் கொள்கிறார்களோ அவர்களுக்கு மட்டும் தான் கல்வி… அவர்களுக்கு மட்டும் தான் வாய்ப்புகள், அவர்களுக்கு மட்டும் தான் உயர்ந்த பதவிகள், அவர்கள் மட்டும் தான் அதிகாரத்தில் இருக்கக்கூடியவர்களாக வாழ வேண்டும் என்பது அவர்களின் எண்ணம். இதையெல்லாம் உடைத்தது தான் திராவிட இயக்கம்

**தந்தை பெரியார் நினைத்திருந்தால்!**

எந்தெந்த மனிதர்கள் கல்வி இல்லாமல், யாருக்கெல்லாம் வாய்ப்பு இல்லாமல், சாதியின் பெயரால் பிறப்பின் பெயரால் யாருக்கெல்லாம் வாய்ப்புகள் மறுக்கப்பட்டதோ அவர்களுக்கெல்லாம் வாய்ப்புகளை உருவாக்கித் தந்து இன்று இந்த மேடையிலே இருக்கக்கூடியவர்களாக இருக்கட்டும்… எதிரில் அமர்ந்திருக்க கூடியவர்களாக இருக்கட்டும்… அனைவருக்கும் படிக்கக்கூடிய வாய்ப்பு அனைவரும் வேலைக்கு செல்லக் கூடிய வாய்ப்பினை உருவாக்கித் தந்தது திராவிட இயக்கம் .

தந்தை பெரியார் அந்தஸ்துமிக்க, வசதி வாய்ப்பு மிக்க குடும்பத்தில் பிறந்தவர். அவர் காலம் முழுவதும் தன்னுடைய வியாபாரத்தை கவனித்துக் கொண்டு மிக வசதியாக வாழ்ந்திருக்கலாம். ஆனால் அந்த மனிதர் தன்னுடைய வசதி வாய்ப்புகளை, தன்னுடைய வியாபாரத்தை எல்லாவற்றையும் விட்டுவிட்டு தன்னுடைய கடைசி நாள் வரை இந்த மண்ணை இந்த நாட்டை சீர்திருத்தவே போராடினார்.

எவ்வளவு உடல் நலம் பாதிக்கப்பட்டிருந்தாலும் எத்தனை முறை சிறைக்கு செல்ல வேண்டி இருந்தாலும் கோர்ட்டில் போய் நின்று ஒரு முறை கூட மன்னிப்பு கேட்டதில்லை தந்தை பெரியார்.

‘ஆமாம்… நான் என் மக்களுக்காக போராடினேன். அதற்காக நீதிபதி எனக்கு என்ன தண்டனை கொடுத்தாலும் ஏற்றுக் கொள்கிறேன்’ என்று கர்ஜித்த சிங்கம் தான் தந்தை பெரியார்.

அந்தப் பெரியாரின் உழைப்பு, தியாகம்… அவர் வழியிலே வந்திருக்கக்கூடிய நமது பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர், இன்று நம்முடைய அண்ணன் தளபதி அவர்கள் வரை… இந்த சமூகம் நீதி பெற்ற சமூகமாக, ஆண் பெண் என எந்த வித்தியாசமும் இன்றி எல்லோருக்கும் சுயமரியாதை எல்லோருக்கும் வாய்ப்பு எல்லோருக்கும் கல்வி என்று நினைக்கக்கூடிய ஆட்சியை தந்து கொண்டிருக்கிறார்கள்.

**விஸ்வகர்மா திட்டத்துக்கும் கலைஞர் கைவினைஞர் திட்டத்துக்கும் வித்தியாசம்!**

இங்கே டாக்டர் பூங்கோதை அவர்கள் பேசும்போது விஸ்வகர்மா திட்டத்தை பற்றி சொன்னார்கள். அவர்கள் புதிய கல்விக் கொள்கை வழியாக விஸ்வகர்மா என்ற திட்டத்தை கொண்டு வருகிறார்கள். நமது முதலமைச்சர் அவர்கள் கலைஞரின் பெயரால் கலைஞர் கைவினைஞர் திட்டம் என ஒரு திட்டத்தை அறிவிக்கிறார்கள். அவர்கள் 15 தொழில்களுக்கு அறிவிக்கிறார்கள். நம்முடைய முதலமைச்சர் 27 தொழில்களுக்கு அறிவிக்கிறார்.

ஆனால் இரண்டுக்கும் என்ன வித்தியாசம் என்றால்… விஸ்வகர்மா திட்டத்தில் நீங்கள் பயன்பெற வேண்டும் என்றால் வழி வழியாக குடும்பம் குடும்பமாக நீங்கள் அந்த தொழிலை செய்து வருபவராக இருக்க வேண்டும்.

ஆனால் நமது திட்டத்தில்… நீங்கள் எந்த குடும்பத்தில் பிறந்திருந்தாலும் கலைஞர் என்ற அந்த ஒன்று போதும் இந்த திட்டத்தில் பயன் பெறுவதற்கு. இதுதான் வித்தியாசம்.

அவர்கள் தாத்தா, பாட்டி, அப்பா, அம்மா என அந்த தொழிலில் இருந்து வெளியே சென்று விடக்கூடாது… ஏற்கனவே நாம் அடைக்கப்பட்டு இருந்த கூண்டில் மீண்டும் நம்மை அடைத்து வேறு எந்த வாய்ப்பும் நமக்கு கிடைக்கக் கூடாது என்று நினைக்கிறார்கள்.

**புதிய கல்விக் கொள்கையை தமிழ்நாட்டிடம் இருந்து கற்க வேண்டும்!**

ஏற்கனவே நீட் தேர்வை கொண்டு வந்தார்கள். மருத்துவக் கல்லூரிக்கு போகக்கூடிய அனைத்து கதவுகளையும் அடைக்கிறோம் என்று அடைத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்போது புதிய கல்விக் கொள்கையை கொண்டு வருகிறார்கள்.

அதில் நாம் கையெழுத்து போட்டால் தான் தமிழ்நாட்டுக்கு கொடுக்க வேண்டிய நிதியை ஒன்றிய அரசு கொடுக்கும் என்று நிர்பந்திக்கிறார்கள். ஹிந்தி கற்றுக்கொள்ள வேண்டும் என்கிறார்கள். அதைத் தாண்டி… அதிகமாக மாணவர்கள் இல்லாத பள்ளிகளை எல்லாம் மூடிவிட்டு சுற்றுவட்டாரங்களுக்கெல்லாம் சேர்த்து ஒரே பள்ளியை நடத்த வேண்டும் என்கிறார்கள்.

ஆனால் தமிழ்நாடு அப்படிப்பட்டதா? ஒரு மலைப் பிரதேச பள்ளியிலே ஒரே ஒரு மாணவனோ மாணவியோ படித்தால் கூட அந்த பள்ளிக்கூடத்தை நாம் மூட மாட்டோம். ஏனென்றால் அந்தப் பள்ளியை மூடிவிட்டால் அந்த பிள்ளை மேலும் சில தூரம் பயணித்து பள்ளி செல்லாது. அவர்களுக்கான வாய்ப்புகள் தட்டி பறிக்கப்படும் என்பதால்… ஒரு பிள்ளையோ இரண்டு பிள்ளைகளோ படித்தால் கூட அவர்களுக்கு என ஆசிரியர் அவர்களுக்கென பள்ளிக்கூடம் நடத்துவோம்.



ஆனால் பிள்ளைகளைப் பற்றி கவலைப் படாமல் கட்டடங்களை பராமரிக்க வேண்டும் என்று நினைத்து அந்த பள்ளிக்கூடங்கள் எல்லாம் மூடிவிட்டு ஒரே இடத்தில் நடத்தி அந்த பிள்ளைகளுக்கெல்லாம் வாய்ப்பை தட்டிப் பறிக்கும் ஆட்சி தான் பிஜேபி ஆட்சி. எல்லாருக்கும் கல்வி என நினைக்கக் கூடியது திராவிட இயக்கம், திராவிட மாடல் ஆட்சி.

புதிய கல்விக் கொள்கையை கொண்டு வந்து விட்டு அவர்கள் பெருமையாக சொல்கிறார்கள், ‘இன்னும் 30 வருடங்களில் நாங்கள் உயர்கல்வியை படிப்பவர்கள் 50 சதவீதம் என்ற நிலையை எட்டி விடுவோம்’ என்று.

இதையெல்லாம் எந்த காலத்திலோ தமிழ்நாடு தாண்டி வந்துவிட்டது. நியாயமாக பார்த்தால் நாம் தான் அவர்களுக்கு புதிய கல்விக் கொள்கை என்றால் என்னவென்று சொல்லித் தர வேண்டும். தமிழ்நாட்டுக்கு வந்து அவர்கள் பாடம் படித்துச் செல்ல வேண்டும். ஆனால் நாம் புதிய கல்விக் கொள்கையை பின்பற்ற வேண்டும் என்றும், அப்படி பின்பற்றாவிட்டால் நமக்கு நியாயமாக வர வேண்டிய நிதியை தராமல் அங்கே ஆட்சி பீடத்தில் உட்கார்ந்து மிரட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

**தமிழ்ப் பெண்களின் சகோதரனாக, தந்தையாகத் திகழும் முதல்வர்!**

“நீ பணம் தந்தாலும் தராவிட்டாலும் என் பிள்ளைகளை நான் படிக்க வைப்பேன். எந்த மாநிலம் புதிய கல்விக் கொள்கையில் கையெழுத்து போட்டாலும், தமிழ்நாடு அதில் கையெழுத்திடாது” என்று சொல்லிய முதலமைச்சர் நமது அண்ணன் தளபதி அவர்கள்.

நீங்கள் சொல்லித் தந்து நாங்கள் கற்றுக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. நாங்கள் சொல்லித் தருகிறோம் எங்கள் பின்னால் நீங்கள் வாருங்கள் என்று சொல்லக் கூடிய அந்த திராணி தமிழ்நாட்டுக்கு இருக்கிறது. ஏனென்றால் தலைவா கலைஞர் அவர்கள் ஆட்சியிலே சின்ன சின்ன கிராமங்களில் கூட கல்லூரிகளை உருவாக்கி கட்டியவர்.

இந்த வழியில் அந்தக் கல்லூரிகளில் நம் வீட்டுப் பெண்கள் படிக்க வேண்டும், இளைஞர்கள் படிக்க வேண்டும் அவர்களது உயர் கல்வி எந்த காரணத்தைக் கொண்டும் தடைபட்டு விடக்கூடாது என்பதற்காகத்தான் இப்போது நம்முடைய முதலமைச்சர் அண்ணன் புதுமைப்பெண் திட்டம் தமிழ் புதல்வன் திட்டம் அறிவித்து லட்சக்கணக்கான மாணவ மாணவிகள் கல்லூரிக்கு சென்று படிக்கக்கூடிய வாய்ப்பை உருவாக்கித் தந்திருக்கிறார்.

ஒரு மேடையிலே புதுமைப்பெண் திட்டம் வழியாக பயன் அடையக்கூடிய ஒரு சகோதரி தனக்கு கிடைத்த வாய்ப்பைப் பற்றி பேசுகிறாள். பன்னிரண்டாவது படிக்கும் போதே அவர்கள் வீட்டிலே அந்த பெண்ணுக்கு திருமணம் செய்து வைத்து விடுகிறார்கள். அதற்குப் பிறகு அவளுக்கு குழந்தை பிறக்கிறது. குழந்தையை வைத்துக்கொண்டு வறுமையிலே அந்தப் பெண் தத்தளித்து கொண்டிருந்தபோது… பிள்ளை பிறந்து ஒரு ஆண்டுக்கு பிறகு இந்த புதுமைப்பெண் திட்டம் அறிவிக்கப்படுகிறது. இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு இப்போது நான் நர்சிங் படித்துக் கொண்டிருக்கிறேன் நன்றி அண்ணா என தளபதியை பார்த்து அந்த மேடையிலே அந்த சகோதரி கூறுகிறார்.

தனக்கு இனி எதிர்காலமே இல்லை, தன்னுடைய கனவுகள் எல்லாம் உடைந்து விட்டன என்று நினைத்த ஒரு பெண்ணுக்கு… ‘நான் இருக்கிறேன் உனக்கு ஒரு சகோதரனாக தந்தையாக…’ என்று சொல்லி இந்த புதுமைப் பெண் திட்டத்தை கொண்டு வந்தது தான் திராவிட மாடல் ஆட்சி. யாருக்கும் வாய்ப்புகள் இல்லை என்ற நிலை வந்து விடக்கூடாது என நினைக்கக் கூடியவர்கள் நாம். நாமெல்லாம் மேலே வந்து விடக்கூடாது என்று நினைப்பவர்கள் அவர்கள்.

**டங்ஸ்டன்… ஒட்டுமொத்த மாநிலங்களுக்கும் துரோகம் இழைத்த எடப்பாடி!**

இங்கே பேசியவர்கள் டங்ஸ்டன் திட்டத்தை பற்றி கூறினார்கள். அந்தத் திட்டத்தை திராவிட முன்னேற்ற கழக ஆட்சி தொடர்ந்து எதிர்த்தது. அங்கே அரிட்டாபட்டி கிராம மக்கள் தொடர்ந்து மிகப்பெரிய போராட்டத்தில் ஈடுபட்டு வந்தார்கள். ஏனென்றால் அது பாதுகாக்கப்பட்ட இடம். நம்முடைய எத்தனையோ பாரம்பரிய சின்னங்கள் அந்த பகுதியில் புதைந்து கிடக்கின்றன. அந்த இடம் பாதுகாக்கப்பட வேண்டும், அந்த மக்களின் வாழ்வாதாரம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காக அவர்கள் போராடுகிறார்கள்.

நம்முடைய முதலமைச்சர் சட்டமன்றத்திலே டங்ஸ்டன் திட்டத்திற்கு எதிராக ஒரு தீர்மானத்தை கொண்டு வந்து, ‘நான் ஆட்சியில் இருக்கும் வரை தமிழ்நாட்டில் இந்த திட்டம் நிறைவேறாது’ என்று தெரிவித்த பிறகு… ஒன்றிய அரசு இந்த திட்டம் இனி செயல்படுத்தப்பட மாட்டாது என்று அறிவிக்கிறது..

ஆனால் அந்தத் திட்டம் வருவதற்கு யார் காரணம்? மாநிலங்களவையிலே மாநிலங்களின் உரிமையை பறிக்கக் கூடிய கனிம வள சுரங்க சட்டம் கொண்டுவரப்பட்டபோது அதை ஆதரிக்கிறேன் என நான் முழுமையாக ஆதரிக்கிறேன் என தன்னுடைய உரையை ஆரம்பித்து இந்த மசோதாவை நீங்கள் நிறைவேற்ற வேண்டும் நாங்கள் உங்களோடு இருக்கிறோம் என்று என்று சொல்லி அந்த மசோதாவை ஆதரித்தது அதிமுக. இதைப் பேசியவர் நீண்ட அரசியல் பாரம்பரியம் இருக்கக்கூடிய தம்பிதுரை அவர்கள். அப்போது எங்கே போனார் எடப்பாடி?

எதிர்த்திருந்தால், அந்த சட்டம் நிறைவேறாவிட்டால் நாம் இவ்வளவு போராடி இருக்க வேண்டிய அவசியம் இல்லை. தங்களுடைய பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வதற்காக தமிழ்நாட்டின் உரிமைகளை விட்டுக் கொடுத்தவர்கள் தான் அதிமுகவினர்.

யார் துரோகம் செய்தது? தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல இந்தியாவிலே இருக்கக்கூடிய ஒவ்வொரு மாநிலத்துக்கும் ஒட்டுமொத்தமாக துரோகத்தை இழைத்து விட்டு இன்று டங்ஸ்டன் பற்றி பேசுவதற்கு அதிமுகவுக்கு என்ன உரிமை இருக்கிறது?

எத்தனை மக்கள் விரோத சட்டங்கள்… இஸ்லாமியர்களுக்கு எதிரான சட்டங்கள் உள்ளிட்ட எல்லாவற்றுக்கும் வளைந்து கொடுத்தே பழகியவர்கள். ஏனென்றால் அவருக்கு நிமிர்ந்து நின்று பழக்கமில்லை, வளைந்து நின்றே பழகியவர்கள். ஒன்றிய அரசிடம் வளைந்து கொடுத்து தன்னுடைய நிலையை தக்க வைத்துக் கொண்டார்கள்.

எல்லா சட்டங்களுக்கும் வளைந்து கொடுத்தார்கள். சட்டமன்றத் தேர்தலின் போது தான் எடப்பாடி திடீரென தட்டி எழுப்பி அரசியலுக்கு வருவார். அதற்குப் பிறகு எங்கே போவார் என்று தெரியாது. இப்படித் தான் அரசியல் நடத்திக் கொண்டிருக்கிறார்கள் இதில் இதில் சில பேர் நாட்டு மக்களுக்காக தங்களை தாங்களே சாட்டையால் அடித்துக் கொள்கிறார்கள்.

**தளபதிக்குத் தகுதியான எதிரிகளே இல்லை!**

சில நேரங்களில் நான் தளபதியை நினைத்து வருத்தப்படுவதுண்டு. கிட்டத்தட்ட 50 ஆண்டுகால அரசியல் பாரம்பரியமிக்க நம்முடைய முதலமைச்சர் தளபதி அவர்களுக்கு நல்ல எதிரிகள், பேர் சொல்லக்கூடிய ஒரு எதிரி கூட தெரியாத இடத்திலே அவர் நின்று கொண்டிருக்கிறார்.

ஆனால்… தமிழ் துரோகிகளை எதிர்த்து, தமிழ் இனத்தின் துரோகிகளை எதிர்த்து, தமிழன் என்று சொல்லிக்கொண்டு தமிழர்களை கொச்சைப்படுத்தக்கூடிய, தமிழர்களை இழிவு படுத்தக்கூடிய, தந்தை பெரியாரை இழிவு படுத்தக்கூடிய சில கூலிக்காரர்களை எதிர்த்து அரசியல் செய்ய வேண்டிய ஒரு நிலைக்கு அவர் தள்ளப்பட்டு இருக்கிறார்.

**ஆளுநரும் இல்லையென்றால் போர் அடித்துவிடும்!**

அதனால்தான் பொழுது போக வேண்டும் என்பதற்காக ஒரு கவர்னரை கொண்டு வந்து வைத்திருக்கிறார்கள். அவரும் இல்லையென்றால் எல்லாருக்கும் போர் அடித்துவிடும்.

அவர் ஆளுநர் மாளிகையில் இருந்து கொண்டு ஒரு அரசியல்வாதியாக ஒரு எதிர்க்கட்சியில் இருக்கக் கூடியவர் எப்படி செயல்பட வேண்டுமோ அப்படி செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்.

அவர் சட்டமன்றத்துக்கு வருவார், ஆனால் பாதியிலேயே எழுந்து போய்விடுவார். நான் கூட ஆர்ப்பாட்டத்தின் போது கேட்டேன்… ‘எதுக்கு சட்டமன்றத்துக்கு வர்றீங்க? வீட்டில இருந்து கொண்டு லீவ் லெட்டர் கொடுத்து விட்டால் தளபதி ஒன்னும் சொல்ல மாட்டார்’ என்று.

நீங்கள் எந்த தேசிய கீதத்தை பாதுகாக்கிறேன் என்று சொல்கிறீர்களோ அந்த தேசிய கீதத்தை அவமதித்து, கவர்னருக்கான எந்த ஒரு மாண்பையும் கடைப்பிடிக்காமல் கவர்னர் பதவி என்றால் என்னவென்றே புரிந்து கொள்ளாமல், நீதிமன்றம் கூட உங்கள் தலையில் குட்ட வேண்டிய அவசியத்தை உருவாக்கி… இப்படி ஒரு நிலையிலே ஆளுநரை வைத்துக்கொண்டு தமிழ்நாட்டிலேயே நாம் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறோம்.

இப்படி எத்தனையோ தடைகள், அரசியல் ரீதியான எதிர்ப்புகள், நம்முடைய அமைச்சர்கள் மீதான வழக்குகள், அதையும் தாண்டி தமிழ்நாட்டில் மக்களுக்கான திட்டங்களை செயல்படுத்துவதற்கு நமக்கு நியாயமாக வந்து சேர வேண்டிய நிதியை வழங்காமல் ஒவ்வொரு நாளும் தமிழ் மண்ணுக்கு தமிழ் மக்களுக்கு பிரச்சினைகளை உருவாக்கிக் கொண்டே இருக்கக்கூடிய ஒன்றிய அரசு… அவர்களோடு நேரடியாகவோ பின் வழியாகவோ கூட்டணி வைத்துக்கொண்டு அரசியல் செய்து கொண்டிருக்க கூடியவர்கள்… இவர்களை எதிர்த்து தான் நாம் களமாட வேண்டிய நிலை.

எதிரிகள் யாராக இருந்தாலும் நாம் ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும் நம்முடைய கடமை நம்முடைய கண்ணியம் நம்முடைய கட்டுப்பாடு அத்தனையும் தமிழ் மண்ணைக் காக்க வேண்டும், தமிழ் மொழியை காக்க வேண்டும், தமிழ் இனத்தை காக்க வேண்டும் என்பதை நினைவில் வைத்துக் கொண்டு நாம் ஒவ்வொருவரும் வரக்கூடிய தேர்தலிலே களமாட வேண்டும்.

அதையும் தாண்டி… இந்த மக்களை உயிர்ப்போடு, சுயமரியாதையோடு தந்தை பெரியார் மண் என்ற அந்தத் திமிரோடு பெருமிதத்தோடு வாழ வைக்க வேண்டியது நம்முடைய கடமை நன்றி”

இவ்வாறு கனிமொழி கருணாநிதி அவர்கள் உரையாற்றினார்.

**பெருந்தலைவர் காமராஜர் சிலைக்கு மாலை!**

முன்னதாக, தென்காசி தெற்கு மாவட்டம், ஆலங்குளத்தில் உள்ள பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி ஆட்டோ ஓட்டுனர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

தொடர்ந்து, பட்டமுடையார்புரத்தில் உள்ள கலைஞர் அறிவாலயத்தில், கலைஞர் நூற்றாண்டு அலுவலகம் மற்றும் வீரகேரளம்புதூரில் தலைமை செயற்குழு உறுப்பினர் ஜெசுராஜன் அவர்களின் இல்லம் ஆகியவற்றை திறந்து வைத்து, கழுநீர்குளத்தில் புதிதாக கட்டப்பட இருக்கும் கலைஞர் அறிவாலயம் கட்டுமானப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, சுரண்டை நகரில் கலைஞர் நூற்றாண்டு விழா கொடிக்கம்பங்களில் கழகக் கொடியினை ஏற்றி வைத்தார். மேலும், சுரண்டையில் பெடரல் வங்கியின் சமூக பொறுப்பு நிதியில் இருந்து சுரண்டை நகராட்சிக்கு மின் மோட்டார் வாகனத்தை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் தென்காசி தெற்கு மாவட்ட கழகப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன், தென்காசி வடக்கு மாவட்ட பொறுப்பாளரும், சட்டமன்ற உறுப்பினருமான ஈ. ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் ராணி ஸ்ரீ குமார், திமுக ஊடகத்துறை இணைச் செயலாளர் கவிஞர்.சல்மா, மாநில சுற்றுச்சூழல் அணி தலைவர் பூங்கோதை ஆலடி அருணா, தேர்தல் பணிக்குழு செயலாளர் திருமிகு.ராஜம் ஜான், மகளிர் தொண்டரணி துணைச் செயலாளர் விஜிலா சத்யானந்த் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.